11.10.2017

தினமலர்

## வளம் கொழிக்கும் கண்வலி கிழங்கு சாகுபடி



கண்வலி கிழங்கு மூலிகை பயிரானது , 'செங்காந்தள்' என்ற பெயரில் தமிழகத்தின் மாநில மலராகும் இப்பயிர் பல விவசாயிகளின் வாழ்வாதாரத்தை மேம் . .படுத்தியுள்ளது

குறிப்பாக கரூர் , சேலம், ஈரோடு, நாமக்கல் மாவட்டங்களில் பரவலாக பயிர் செய்யப்பட்டாலும் திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம், தொப்பம்பட்டி பகுதிகளில் விவசாயிகள், இப்பயிரை குழந்தை போல் கவனித்து சாகுபடி செய்கின்றனர் . அதற்கு காரணம் இப்பயிரின் மகசூல் மற்றும் லாபமே கடந்த மாதம் அதிகபட்சமாக . ஒரு கிலோ கண்வலி கிழங்கு விதை 3,000 ரூபாய் வரை விற்பனையானது . சராசரியாக ஒரு ஏக்கருக்கு150 முதல் 200 கிலோ வரை மகசூல் கிடைக்கும். மருத்துவ குணம்

இதன் கிழங்குகள் மருத்துவ குணமுடையது எனினும் விதையே பிரதான மருத்துவ . இதன் விதைகளில் இருக்கும் . பொருளாக பயன்படுத்தப்படுகிறது'கொன்ச்சிசைன்' என்ற பொருள் நரம்பு , தோல், வயிறு சம்பந்தப்பட்ட நோய்களுக்கு மருந்தாக பயன்படுகிறது மேலும் புற்று நோய்களுக்கான மருந்துகள் தயாரிப்பிலும் இவை . இவை பெருமளவில் வெளிநாடுகளுக்கே ஏற்றுமதி .பயன்படுத்தப்படுகின்றன கடந்த பத்து ஆண்டுகளில் இதன் ஏற்றுமதி பல ம .செய்யப்படுகின்றனடங்கு உயர்ந்துள்ளது. உறங்கும் கிழங்கு இப்பயிரின் கிழங்கானது மண்ணிற்கடியில் உறக்க நிலையில் இருக்கும் வந்ததும் செடிகள் வளர்ந்து (ஆகஸ்ட் - ஜூன்) மழைக்காலம் . .வெளியில் வரும்5 முதல் 8 வாரம் வளர்ந்து அதிகப்படியான பூக்களை உருவாக்கும் . சுமார் ஏழு வாரங்கள் பூத்து, காய்களையும், விதைகளையும் உருவாக்கிய பின் செடிகள்

மடிந்து விடும் ஒவ்வொரு ஆண்டும் .கிழங்குகள் மீண்டும் உறக்க நிலையை அடையும் . ஒரு செடி2 முதல் 3 புதிய கிழங்குகளை உருவாக்கும் ஒரு முறை கிழங்கு நடுவதன் . மூலம் சுமார்3 முதல் 5 ஆண்டுகள் வரை பராமரிக்கலாம் . நிலம் தேர்வு வடிகால் வசதி , செம்மண், மணல் பாங்கான நிலப் பகுதி ஏற்றது ஜூன் ., ஜூலையில் நடவு செய்யலாம் . இப்பயிருக்கு பிரத்தியேக ரகம் இல்லை . நல்ல தரமான 'எல்' வடிவிலான 60 முதல் 80 கிராம் எடையுடைய கிழங்குகளை நடவுக்கு பயன் படுத்தலாம் ஒரு ஏக்கர் நடவு செய்ய .800 முதல் 900 கிலோ வரை கிழங்குகள் தேவைப்படும் நடவுக்கான கிழங்குகளை .'கார்பென்டசிம்' என்ற மருந்தில் 2 கிராமை ஒரு லிட்டர் தண்ணீர் என்ற அளவில் 20 நிமிடம் ஊற வைத்து , நடுவதால் அழுகல் நோய் வராது கிழங்குகளை .60க்கு 30 செ.மீ., இடை வெளியில் 5 - 6 செ.மீ., ஆழத்தில் கிடை மட்டமாக நட வேண்டும் குறைந்த இடைவெளியில் நடுவதால் அயல் . . மகரந்த சேர்க்கை எளிதாகும் நோய் தொற்று செடிகளின் வளர்ச்சிக்கு ஏற்ப ஓரடுக்கு அல்லது ஈரடுக்கு முறையில் நீண்ட வரிசையில் பிரம்பு அல்லது கம்பிகள் கொண்டு பந்தல் அமைப்பதால் அதிக பூக்கள் பூக்கவும் , எளிதாக அயல் மகரந்த சேர்க்கை செய்யவும் வழி கிடைக்கும் . விவசாயிகள் அதிக ரசாயன உரங்களை குறைந்த கால இடை வெளியில் பயன்படுத்துவதால் மண்ணில் தன்மை மாறுவதோடு , கிழங்குகள் எளிதில் நோய் தொற்று அடைகிறது எனவே அதிகளவு மக்கிய தொழு உரம் ., வேப்பம் புண்ணாக்கு மற்றும் உயிர் உரங்களை மட்டுமே பயன்படுத்த வேண்டும் . தழை, மணி மற்றும் சாம்பல் உரங்களை முறையே (கே:பி:என்)50:20:30 கிலோ ஒரு ஏக்கர் என்ற அளவில் இரண்டு முறையாக பிரித்து இட வேண்டும் . மகரந்த பைகள் ஏக்கருக்கு 2 கிலோ 'டிரைக்கோடெர்மா விரிடி ', 'சூடோமோனாஸ்', 'புளோப்ரோசென்ஸ்' போன்ற உயிரில் மருந்துகளை இடுவதன் மூலம் அழுகல், வாடல் நோயிலிருந்து பாதுகாக்கலாம். இப்பயிருக்கு பொட்டாஷ் மற்றும் சிங் (சாம்பல் சத்து) எனவே ஏக்கருக்கு .தேவைப்படும்10 கிலோ சிங்சல்பேட்டை முதல் உரத்துடன் கலந்து இட வேண்டும் இப்பயிரின் பூக்கள் அயல் மகரந்த மற்றும் தன் மகரந்த . சேர்க்கைவகையை சார்ந்ததுமகரந்த பைகள் ., சூல் முடியிலிருந்து நேர் எதிர் திசையில் நீட்டி கொண்டிருப்பதால் , இவற்றில் சிறு பூச்சிகளாலும் இயற்கையாகவும் மகரந்த சேர்க்கை கடினமாகிறது. உதவும் கைகள் காலை 8:00 முதல் காலை 11:00 மணிக்குள் கைகளால் மகரந்த சேர்க்கை செய்வதன் மூலம் காய்களின் எண்ணிக்கை அதிகரிக்கலாம் இவற்றின் கிழங்குகள் .3 முதல் 5 ஆண்டுகள் வரை மண்ணில் இருந்து ஆண்டுக்கு ஆண்டு தளைத்து மகசூல் அளிக்கும். எனவே மழைக் காலங்களில்

வடிகால் செய்து தண்ணீர் தேங்குவதை தவிர்ப்பதன் மூலம் கிழங்கு அழுகலை தடுக்கலாம் கிழங்குகள் முளைக்கும .ு தருணத்தில் களைக்கொல்லி பயன்பாட்டை தவிர்க்க வேண்டும் . அறுவடை முடிந்த பின் அடுத்த பருவம் வரையிலான இடைப்பட்ட காலத்தில் தக்காளி , மிளகாய், பாகற்காய் போன்ற பயிர்களை இடைப்பட்ட கால பயிர்களாக பயிரிடுவதன் மூலம் கூடுதல் மகசூல் பெறலாம் . நடவு செய்த 100 முதல் 110 வது நாட்களில் காய்கள் அறுவடைக்கு வரும் . காய்கள் வெளிர் பச்சை நிறத்தை அடைந்தவுடன் அறுவடை செய்யலாம் முதல் . ஆண்டு100 முதல் 150 கிலோவும், அதற்கு அடுத்த ஆண்டுகளில் ஏக்கருக்கு 200 முதல் 225 கிலோ வரை விதைகள் கிடைக்கும் . விதைகளை நன்கு உலர்த்தி சேமிக்க வேண்டும் இ .தனால் விதைகளை நீண்ட நாட்களுக்கு சேமிப்பதுடன் , பூஞ்சான் தொற்றிலிருந்து பாதுகாக்கலாம் . கண்வலி கிழங்கு விவசாயம் அதிகளவு லாபம் தரக்கூடிய பயிர் இதன் சாகுபடிக்கான . முறைகளும், செலவுகளும் சற்று அதிகம் விவசாயிகள் முறையான . வழிமுறைகளை பயன்படுத்துவதன் மூலம் மகசூலை அதிகரிப்பதோடு செலவை குறைக்கலாம். - முனைவர் நசுகந்தி. விவசாய ஆலோசகர் கோவை. 94435 43372

## பட்டுப்புழுக்கள் உண்ணும் மல்பெரி செடி சாகுபடி ஆண்டுக்கு -11 மாதம் லாபம் தரும் பணத்தோட்டம்

பட்டுப்புழுக்கள் மல்பெரி இலைகளை மட்டுமே உணவாக உட்கொள்ளும் மல்பெரி . செடிகளை நடவு செய்த ஆறு மாதத்திற்கு பின் பட்டுப்புழுக்களுக்கு உணவாக பட்டு முட்டை ஒன்றில் இருந்து .அளிக்கலாம்450 முதல் 700 புழுக்கள் வரை இருக்கும்.

மழை, குளிர் காலத்தில் பட்டுப்புழுக்கள் வளர்க்க ஏற்ற சீசன் செடிகளுக்கு இயற்கை . உரம் அளித்து வளர்த்தால்15 ஆண்டு முதல் 20 ஆண்டுகள் வரை பலன் தரும் . தனியார் இளம் பட்டுப்புழு வளர்ப்பு மையங்களில் இருந்து ஏழாவது நாள் புழுக்களை விவசாயிகள் பெறுவர் தங்களின் தோட்டங்களில .ு அதற்கான குடில் அமைத்து புழுக்களை விடுவர்.

2 கிராம் எடை பட்டுக்கூடு ஒன்றரை ஏக்கரில் மல்பெரி செடி வளர்த்தால் 50 அடி நீளம், 20 அகலத்தில் குடில் அமைக்க வேண்டும் . குடில் ஒன்றுக்கு 2 லட்சத்து 10 ஆயிரம் புழுக்களை வளர்க்கலாம் மல்பெரி பயிரிடப்படும் ஏக்கருக்கு ஏ .ற்ப குடில்களின் அளவு இருக்க வேண்டும் ஒரு பேட்ஜூக்கு ஒரு ஏக்கர் என . குறைந்தபட்சம்2 ஏக்கர் நிலம் தேவைப்படும் . இதன்படி ஒரு பேட்ஜ் பட்டுக்கூடுகள்

கிடைத்ததும் அடுத்த பேட்ஜூக்கான மல்பெரி செடிகள் தயார் நிலையில் வளரும்படி . . பார்த்து கொள்ள வேண்டும் இத்தொழில்நுட்ப அடிப்படையில் ஆண்டுக்கு 11 மாதங்கள் வரை பட்டுக்கூடுகள் உற்பத்தி செய்ய இயலும் .2 கிராம் எடைக்கு கூடுதலாக இருந்தால் அதிக லாபம் . எடை குறைவாக இருந்தால் விலை போகாது .

ஆண்டு முழுவதும் லாபம் மல்பெரி இலைகளை இளம் புழுக்கள் முதல் 14 நாட்கள் வேகமாக உண்ணும்பின் இரண்ட .ரை நாட்கள் தோலுரிக்கும் அப்போது மல்பெரியை . .உண்ணாது

18 வது நாளில் இருந்து தொடர்ந்து 36 மணி நேரத்திற்குள் '8' எண் வடிவில் வாயால் பட்டுக்கூடு கட்டும் ஒன்றின் எடை .2 கிராம் புழுக்கள் அதிகபட்சம் .5 கிராம் எடையுடன் இருக்கும் . ஒரு கூட்டின் நீளம் ஒன்றேகால் கிலோ மீட்டர் இவ்வாறு . உருவாகும் பட்டுக்கூடுகள் ஒரு கிலோ580 ரூபாய் முதல் 600 ரூபாய் என பெங்களூரு ராம்நகர் பட்டுச்சந்தை வியாபாரிகள் கொள்முதல் செய்கின்றனர் . பட்டுக்கூடுகளை மத்திய பட்டு வாரியம் மூலமும் அனுப்பலாம் ஆண்டுக்கு .11 மாதம் லாபம் தரும் ஒரே விவசாய தொழில் பட்டுக்கூடு உற்பத்தி மட்டுமே . சாதனை பட்டு விவசாயி மதுரை மாவட்டம் மண்ணாடிமங்கலம் பட்டு விவசாயி முருகன் , தனது தரிசு நிலத்தை வளமான பூமியாக மாற்றி இயற்கை உரங்களை மட்டுமே பயன்படுத்தி மல்பெரி செடி வளர்ப்பின் மூலம் பட்டுக்கூடு உற்பத்தி செய்து முன்னோடி விவசாயியாக உள்ளார் . அவர் கூறியதாவது தேசிய அளவில் கர்நாடகம் :60 சதவிகிதம், தமிழ்நாடு, ஆந்திரா, மகராஷ்டிரா மாநிலங்களில் தலா 10 சதவிகிதம், பிற மாநிலங்களில் ஒட்டுமொத்தமாக 10 சதவிகிதம் மட்டுமே பட்டு உற்பத்தி நடக்கிறது . மல்பெரி செடி வளர்க்க களிமண் , செம்மண் கலந்த வண்டல் மண் ஏற்றது . எனது நிலம் களிமண்ணால் ஆனது . எனினும் அடியுரமாக குப்பைகள் , ஆட்டுப்புழுக்கை இட்டு வளமான மண்ணாக மாற்றினேன்வாழை ., கரும்புக்கு பதிலாக மல்பெரியை கடந்த ஐந்து ஆண்டுகளாக வளர்த்து விவசாயத்தில் வருவாய் ஈட்டி வருகிறேன் . கொட்டில் முறை ஆடுகள் குறைந்தபட்சம் மூன்று ஏக்கர் நிலம் இருந்தால் ஆண்டுக்கு 11 பேட்ஜ் என்ற அளவில் புழுக்கள் வளர்க்கலாம் . ஒரு பேட்ச்சிற்கு 200 கிலோ பட்டுக்கூடு கிடைக்கும் .35 ஆயிரம் ரூபாய் முதல் 45 ஆயிரம் ரூபாய் வரை செலவாகும் மாதம் தோறும் லாபம் .70 ஆயிரம் ரூபாய் வரை கிடைக்கும் பட்டு விவசாயிகளுக்கு மத்திய பட்டு வாரியம் . ( ஆயிரம் கிலோ) ஆட்டுப்புழுக்கை டன். பல்வேறு சலுகைகளை வழங்குகிறது8,000 ரூபாய் இயற்கை உரத்துக்காக கொட்டில் முறையில் .25 வெள்ளாடுகளை

வளர்க்கிறேன்.

இவற்றிற்கு உணவாக மசாலா புல் , அகத்திக்கீரை பயிரிட்டுள்ளேன் இரண்டு . வளர்ந்த . மாதத்திற்கு ஒரு முறை ஒரு டன் அளவில் ஆட்டுப்புழுக்கை கிடைக்கிறது ஆடுகளை இறைச்சிக்காக கிலோ250 ரூபாய்க்கு விற்கிறேன்.

சீனாவின் உணவு கிண்ணம் மல்பெரி செடிகளின் தண்டு , ஆடுகள் மேய்ந்த பின் கிடைக்கும் கழிவுகள் , கழிவு பட்டுக் கூடுகள் சீனாவில் அதிக புரோட்டீன் உள்ள) கழிவு பட்டுக்கூடுகள் சீனாவின் உணவு கிண்ணம் என . உணவாக பயன்படுகிறது மக்க வைத்து இயற்கை உரமாக தொடர்ந்து மல்பெரி (அழைக்கப்படுகிறது . செடிகளுக்கு பயன்படுத்தி வருவதால் உரச்செலவு முற்றிலும் இல்லை மல்பெரி வயலை சுத்தமாக பேணுவதன் மூலம் பூச்சித்தாக்குதலில் இருந்து பாதுகாக்க முடியும் பட்டுக்குடிலில் .27 முதல் 28 டிகிரி செல்சியஸ் வெப்ப நிலை நிலவும்படி பார்த்து கொள்ள வேண்டும் . ஒரு பேட்ச் முடிந்ததும் அடுத்த பேட்ச் துவங்கும் முன் குடில் முழுவதும் சுண்ணாம்பு ஸ்பிரே செய்து முழுமையாக சுத்தம் செய்ய வேண்டும் . இயற்கை உரம் , களைகள் இல்லாத வயல் என இரண்டையும் கடைப்பிடித்தால் ஆண்டு முழுவதும் லாபம் உறுதி உழைப்பால் நிலத்தில் விழும் ஒவ்வொரு சொட்டு . வியர்வையும் ஒவ்வொரு பொற்காசுகளுக்கு சமம், என்றார்.

- காசுப்பிரமணியன். மதுரை.

## 'உழவர் உறுதுணை மையம்'விவசாயிகளின் தோழன்



தமிழ்நாடு வேளாண் பல்கலை கழகம் தன் கல்லூரிகள் , துறைகள், பண்ணைகள், கே எனப்படும் உழவர் அறிவியல் மையங்கள் மூலம் விவசாயிகளுக்கு .கே.வி. பல்வேறு ஆலோசனை, பயிற்சி, நேரடி வழிகாட்டல் .வழங்கி வருகிறது (வயல்களில்) கோவை பல்கலை கழக வளாகத்தில் செயல்படும் 'வேளாண் உறுதுணை மையம் ' பல்வேறு சேவைகளை வழங்கி வருகிறது (இலவசம்) மண் பரிசோதனை கூடம் ., உழவர் விஞ்ஞானிகள் கலந்துரையாடல் , கருத்துக் காட்சிகள் , ஒளிக்காட்சிகள் மூலம் செயல் விளக்கம் , பூச்சி மற்றும் நோய் பரிசோதனை ஆய்வகம் , வேளாண் இடுபொருட்கள், குறுந்தகடுகள் விற்பனை பிரிவு , வயல் வெளிப் பிரச்னைகளுக்கான ஆய்வுகள் மற்றும் தேவையான தீர்வு , பட்டறிவு பயணம், தொலைபேசி மூலம் தகவல்கள், விரிவாக்க கல்வி இயக்ககம் மூலம் நேரடி , தபால் மூலம் பல்வேறு பயிற்சிகளை வழங்கி வருகிறது . விபரங்களுக்கு 'உழவர் உறுதுணை மையம் , விரிவாக்க கல்வி இயக்ககம், தமிழ்நாடு வேளாண் பல்கலை கழகம், மருதமலை சாலை, கோவை' என்ற விலாசத்தில் விபரம் அறியலாம் தொடர்புக்கு .0422 6611 315, 6611 219.www.tnau.ac.in/ta/agritech.- எம்ஆலோசகர் ஞானசேகர்விவசாய., சென்னை 98416 55629

தினமணி

## தமிழகத்தில் கனமழைக்கு வாய்ப்பு

தமிழகம் மற்றும் புதுச்சேரியில் ஓரிரு இடங்களில் கனமழைக்கு வாய்ப்புள்ளது என்று சென்னை வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ளது. இதுதொடர்பாக ஆய்வு மைய அதிகாரிகள் கூறியது: தென்மேற்கு பருவமழையால் ஏற்படும் வளிமண்டல மேலடுக்கு சுழற்சி மற்றும் வெப்பச்சலனத்தின் காரணமாக தமிழகம் , புதுச்சேரியில் ஒரு சில இடங்களில் மழையோ அல்லது இடியுடன்கூடிய மழையோ பெய்யக்கூடும்.

ஆங்காங்கே ஓரிரு இடங்களில் கனமழைக்கும் வாய்ப்புள்ளது.

சென்னையைப் பொருத்தவரை வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். மாலை அல்லது இரவு நேரங்களில் மழைக்கு வாய்ப்புள்ளது என்று தெரிவித்தனர்.

செவ்வாய்க்கிழமை பதிவான மழை நிலவரம் (மி.மீட்டரில்): வாழப்பாடி, விழுப்புரம் மாவட்டம் வானூர் , கள்ளக்குறிச்சி, தஞ்சாவூர் மாவட்டம் திருக்காட்டுப்பள்ளி ,

கிருஷ்ணகிரி மாவட்டம் போச்சம்பள்ளி - 70, திருச்சி மாவட்டம் மருங்காபுரி , மணப்பாறை - 50, தஞ்சாவூர் மாவட்டம் பாபநாசம், சேலம் மாவட்டம் ஆத்தூர், மதுரை மாவட்டம் மேட்டுப்பட்டி , காஞ்சிபுரம் - 40. இதுதவிர தருமபுரி , திருவண்ணாமலை, கடலூர், திண்டுக்கல், திருவாரூர், அரியலூர், நாகை, ஈரோடு ஆகிய மாவட்டங்களிலும் பரவலாக மழை பெய்துள்ளது.

தினகரன்

## கால்வாய் பாசனத்துக்கு மேட்டூர் அணையில் நீர்திறப்பு




சென்னை மேட்டூர் அணையில் இருந்து புள்ளம்பாடி மற்றும் புதிய கட்டளை : மேட்டுக்கால்வாய்கள் மூலம் பாசனத்திற்காக இன்று முதல் தண்ணீர் திறந்து விட முதல்வர் எடப்பாடி பழனிசாமி நேற்று . முதல்வர் உத்தரவிட்டுள்ளார்வெளியிட்டுள்ள அறிக்கைமேட்டூர் அணையில் இருந்து :, புள்ளம்பாடி மற்றும் புதிய கட்டளை மேட்டுக் கால்வாய்கள் மூலம் பாசனத்திற்காக தண்ணீர் திறந்து விடும்படி , திருச்சி, தஞ்சாவூர் மற்றும் அரியலூர் மாவட்ட விவசாயிகளிடம் இருந்து எனக்கு கோரிக்கைகள் வந்துள்ளன அவர்களின் .வேண்டுகோளை ஏற்று , மேட்டூர் அணையில் இருந்து , புள்ளம்பாடி மற்றும் புதிய கட்டளை மேட்டுக் கால்வாய்களில் நடப்பாண்டு பாசனத்திற்காக இன்று முதல் தண்ணீர் திறந்து விட உத்தரவிட்டுள்ளேன் இவ்வாறு . .கூறி உள்ளார்